# பூரட்டாதி நட்சத்திரம் (ஆத்ம லிங்கம்)



**1. கணபதி வழிபாடு**

பரசிவம், சின்மயம், பூரணம்,

சிவபோகபாக்யம் பரமநிதியம்

**2. திருவருட்பாவில் சிவ பூரட்டாதி சக்தி**

பரம அற்புதம், பரம சேதனம்,

பசு பாசபாவனம்பரம மோட்சம்

**3. திருப்பாவைபாசுரம் – 17 பூரட்டாதி இயல்பு**

அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்

எம்பெருமான் நந்தகோ பாலா எழுந்திராய்

கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே குலவிளக்கே

எம்பெரு மாட்டி யசோதாய் அறிவுறாய்

அம்பர மூடறுத் தோங்கி உலகளந்த

உம்பர்கோ மானே உறங்காது எழுந்திராய்

செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா

உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய்

**Video Link : https://youtu.be/Emfc97TcU9I**

**விளக்கம் :**

உடல் என்னும் கோயிலுக்கு ஒன்பது வாயில். கண்கள் (2), காதுகள் (2), மூக்கு (2), வாய் (1) ஆக மொத்தம் ஏழு. எட்டும், ஒன்பதும் கழுத்துக்கு மேலே தான் உள்ளது. கீழே அல்ல அவை எவை என்றால் உள்நாக்கும், புருவ மத்தியுமாகும்.

இதைத்தான் பசு, பாச, பாவனம் என்கிறோம். இதையே பாசுரத்தில் சூட்சமமாக அம்பரமே, தண்ணீரே, சோறே அறஞ்செய்யும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

**அம்பரமே என்பது சிதம்பரமே**

**தண்ணீரே என்பது பாவனையாகும்**

**சோறே என்பது ஜோதியே ஆகும்**

இம்மூன்றும் கலந்த கலவையே அறஞ்செய்யும் தர்மம் செய்யும் ஆக்கல், காத்தல், அழித்தல் என்ற அறத்தை முடித்துரைக்கும் ( TRINITY ) என்ற பரம அற்புதத்தை திறம்பட செய்து முடிக்கும் கொம்பனார்க்கெல்லாம் கொழுந்தே குலவிளக்கே என்ற வகையில் பெருந்தலைவனாக, கறைபடியாத கரமாக, சிந்தாத சிதறாத முழுமையாக பூரணமாக முழு நிலவாக பணியாற்றுபவர்களே பூரட்டாதி நக்ஷத்ரம். நோற்று சுவர்க்கத்திற்கு செல்லலாம். ஆனால் மோட்சத்திற்கு செல்லும் உம்பர் கோமான் இவர் ஒருவரே. இவர் வழியிலே அண்ணன், தம்பி எவராயினும், உறங்காமல் பரம மோட்சத்தை அடைய முடியும். அம்பரம் மூடறு தோங்கி என அகிலம் ஆகாயம் அனைத்திற்கும் அதிபதி பூரட்டாதியே.

அம்பரமே, தண்ணீரே, சோறே, அறஞ்செய்யும் பூரட்டாதி பூரணங்களே, பசு, பாச, பாவனம் என்று முத்தொழில் தத்துவத்தை பூரணமாக செய்பவர்கள் பூரட்டாதி, அம்பரமே, சிதம்பரமே, தண்ணீரே, ஊடகமே, சோறே, ஜோதியே; என தர்மம் செய்யும், அறஞ்செய்யும் எம்பெருமான் பூரட்டாதி.

கொம்பனார்க்கெல்லாம், கொழுந்தே, குலவிளக்கே அற்புதங்கள், பரம அற்புதங்கள், மனங்கள், பரம சேதனங்கள், இவையிரண்டும் உம்பியும் நீயும் உறங்கேலோர் என்றறிந்து பூரணத்தை அருளுங்கள் பூரட்டாதியே.

## <u>4. வேதத்தில் பூரட்டாதி ஜோதிசக்தி</u>

ஓம் பூர் புவ ஸ்வஹ **(மெட்டு)**

தேஹஸ்கராய வித்மஹே

அஜ ஏக பாதாய தீமஹி

தத்தாத்ரேயா தீமஹி

பூரட்டாதி ப்ரசோதயாத்

பசு பாச பாவனம் மூன்றாகும்

அற்புதம் அதனால் நிறைவேறும்

மோட்சம் பெறவே நீ சொல்வாய்

மோன கூட்டம் உனை சுற்றும்

பூநூல் உண்மையில் உன்நூலே

பூட்டிய வாயில் அடி நாக்கே

பூரணமாய் செல்லும் பூங்காற்றே

புருவ மத்தியில் நமோ நமோ

ஓம் சிவாய மே நம சிவாய மே

த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்

## 5. பூரட்டாதி கவிதை

முப்பது நாளும் பௌர்ணமி
 – முடித்து வைப்பாள் அம்மணி
தப்பது ஆறும் சேதனம்
 – அடித்து வெளுப்பாள் அம்மணி
ஒன்பது எண்பதில் சேதாரம்
 – அடுத்து வருவதில் நூறாகும்
நட்பது ஆதிமுதல் அந்தம்வரை
 – இகமுதல் பரம்வரை மோட்சம்

அற் புதங்கள் நின் வாடிக்கை பூரணம் நோக்கியே
மற் பதங்கள் நின் வரவேற்பும் பூரணம் தேக்கியே
சற் கீதங்கள் நின் சுகங்கள் தியானம் வார்க்கவே
தற் பதங்கள் நின் உழைப்பு காரணம் பிரம்மமே

திடம் மடம் திண்ணம்நின் நல்லெண்ணம்
உடல் படம் வண்ணம்நின் சுக வலிமை
தடம் இடம் கண்ணன்நின் சக மார்க்கம்
வடம் தேர் அண்ணன் நின் பகர் சகஜம்

பசு, பாச பாவனம் யதார்த்த யவ்வனம்
வசு, வாச அற்புதம் ஆத்மார்த்த கர்வம்
மாசற்ற மாணிக்கம் மானவ மோட்சம்
தாச தாச சுபாவம் தாதா ஸப்தசுரம்

நம்பிக்கை நலமுடன் பயக்கவே நிதர்சனம்
தும்பிக்கை துணிவுடன் சிறக்கவே அதிதீவிரம்
தம்பிக்கை பழக்கங்கள் ஏழுவகை அரங்கம்
ஸ்தம்பிக்கும் சவால்கள் குருமூலம் நிர்மாணம்

## 6. அபிராமி அந்தாதியில் பூரட்டாதி சக்தி

**யோக சித்தி பெற**

சிறக்கும் கமலத் திருவே! நின்சேவடி சென்னிவைக்கத்

துறக்கம் தரும், நின் துணைவரும் நீயும் துரியம் அற்ற

உறக்கம் தரவந்து உடம்போடு உயிர் உறவற்ற, அறிவு

மறக்கும் பொழுது, என்முன்னே வரல்வேண்டும் வருந்தியுமே.

**கணவன் மனைவி கருத்து வேற்றுமை நீங்க**

வருந்தா வகைஎன் மனத்தாமரையினில் வந்துபுதுந்து

இருந்தாள் பழைய இருப்பிடமாக இனிஎனக்குப்

பொருந்தாது ஒருபொருள் இல்லை; விண்மேவும் புலவருக்கு

விருந்தாக, வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே.

**அரசாங்கச் செயலில் வெற்றி பெற**

மெல்லிய நுண் இடைமின் அனையாளை, விரிசடையோன்

புல்லிய மென்முலை பொன் அனையாளைப் புகழ்ந்துமறை

சொல்லிய வண்ணம் தொழும்அடியாரைத் தொழுமவர்க்குப்

பல்லியம் ஆர்த்தெழ வெண்பகடு ஊரும் பதம்தருமே.

**மனநிலை பக்குவமடைய**

பதத்தே உருகி, நின்பாதத்திலே மனம் பற்றி, உன்தன்

இதத்தே ஒழுக அடிமைகொண்டாய்; இனியான் ஒருவர்

மதத்தே மதிமயங்கேன்; அவர் போன வழியும் செல்லேன்;

முதல்தேவர் மூவரும், யாவரும் போற்றும் முகிழ்நகையே.

**Video Link : https://youtu.be/iVb8ulEiZMg**

## 7. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் பூரட்டாதி சக்தி ஓம்... ஓம்... ஓம்...

| | |
|---|---|
| ஓம் அரௌத்ராய நம | – அரௌத்ரமெனும் செயல், பலன் விளைவின்மீது பற்றற்றவனே போற்றி |
| ஓம் குண்டலிநே நம | – குண்டலி எனும் மூலாதாரமே போற்றி |
| ஓம் சக்ரிணே நம | – மனமெனும் சுய தரிசன சக்கரமே போற்றி |
| ஓம் விக்ரமிணே நம | – வெற்றி நிலைப்பாட்டின் வாக்காளரே போற்றி |
| ஓம் ஊர்ஜிதஸாஸநாய நம | – சப்த எழுத்துக்களில் அடங்காத சப்தமே போற்றி |
| ஓம் ஸப்தாதிகாய நம | – காரண, காரிய படைப்புக்களின் கூடாரமே போற்றி |
| ஓம் ஸப்தஸஹாய நம | – வேதங்களின் நோக்கமே போற்றி |
| ஓம் ஸிஸிராய நம | – இயற்கை சுருதியே, ஸமிருதியே போற்றி |
| ஓம் ஸர்வரீகராய நம | – ஞானம், செயல்பாடு, இருட்டு பட்டறையின் இதய ஒளியே போற்றி |
| ஓம் அக்ரூராய நம | – கொடுமையில்லா கோடை நிழலே போற்றி |
| ஓம் பேஸலாய நம | – எண்ணம், சொல், செயல், உடல் நான்கிலும் அழகனே போற்றி |
| ஓம் தக்ஷய நம | – சுலபமாய் உள்வாங்கி சுறுசுறுப்பாய் செய்பவனே போற்றி |
| ஓம் தக்ஷிணாய நம | – நிறைகுடமாய், பூரணமாய் மிளிரும் வட்டமே போற்றி |
| ஓம் க்ஷமிணாம் – வராய நம | – பேரமைதியின் ஞான வெளிப்பாடே போற்றி |
| ஓம் வித்வத்தமாய நம | – வித்தைகளின் வித்தகனே போற்றி |
| ஓம் வீதபயாய நம | – பயமறியாத இளங்கன்றே போற்றி |
| ஓம் புண்யஸ்ரவண – கீர்த்தநாய நம | – காதில் கேட்கும் காதல் புண்ணியனே போற்றி |
| ஓம் உத்தாரணாய நம | – கரைகட்கும் கதா நாயகனே போற்றி |
| ஓம் துஷ்க்ருதி க்நே நம | – தீங்கின்றி, தீஞ்சுவை செய் அற்புதனே போற்றி |
| ஓம் புண்யாய நம | – புண்ணியம் பல போதிப்பவனே போற்றி |
| ஓம் து:ஸ்வப்ந – நாஸநாய நம | – கனவுக்கோட்டை ஆருட எதிரியே போற்றி |
| ஓம் வீரக்நே நம | – நினைவுக்கோட்டையை நிர்மாணிப்பவனே போற்றி |
| ஓம் ரக்ஷணாய நம | – பசு, பாச, பாவனமெனும் ஜீவசமாதி |

உட்சுவாசமே போற்றி

ஓம் ஸதப்யோ நம – நன்மக்களின் ரசிகர் மன்றமே போற்றி

ஓம் ஜீவநாய நம – வாசியோகத்தின் பரம மோட்சமே போற்றி

ஓம் பர்யவஸ்திதாய நம – உலகப்புகழ் அற்புத மூச்சுப் பயிற்சியே போற்றி

ஓம் அநந்தரூபாய நம – அனேக அவதாரங்கள் எடுப்பவனே போற்றி

ஓம் அநந்தஸ்ரியே நம – வற்றாத செல்வமே போற்றி

ஓம் ஜிதமந்யவே நம – கோபத்தை வென்றவனே போற்றி

ஓம் பயாபஹாய நம – பயங்கொள்ளாதவனே போற்றி

ஓம் சதுரஸ்ராய நம – கர்மாவின் கனிரசமே போற்றி

ஓம் கபீராத்மநே நம – இயற்கை திடீர் மழையே போற்றி

ஓம் விதிஸாய நம – போட்டிப் பரிசே போற்றி

ஓம் வ்யாதிஸாய நம – இந்திரனுக்கே கால அட்டவணையே போற்றி

ஓம் திஸாய நம – நவநாயகர்களுக்கும் உத்தரவுகள் இடுபவனே போற்றி

## 8.லலிதா ஸஹஸ்ரநாமத்தில் பூரட்டாதி சக்தி

மஹேச்வரீமஹாகாளீமஹாக்ராஸாமஹாசநா
அபர்ணாசண்டிகாசண்டமுண்டாஸுர நிஷூதினீ

க்ஷராக்ஷராத்மிகா ஸர்வலோகேசீ விச்வதாரிணீ
த்ரிவர்க்கதாத்ரீ ஸுபகாத்ரியம்பகாத்ரிகுணாத்மிகா

ஸ்வர்க்காபவர்க்கதாசுத்தா ஜபாபுஷ்ப நிபாக்ருதி
ஓஜோவதீ த்யுதிதராயஜ்ஞரூபாப்ரியவ்ரதா

தூராராத்யாதுராதர்ஷாபாடலீ குஸுமப்ரியா
மஹதீ மேருநிலயாமந்தார குஸுமப்ரியா

வீராராத்கா விராட்ரூபா விரஜா விச்வதோமுகீ
ப்ரத்யக்ரூபாபராகாசாப்ராணதாப்ராண ரூபிணீ

மார்த்தாண்டபைரவாராத்யா மந்த்ரிணீ ந்யஸ்தராஜ்யதூ
த்ரிபுரேசீ ஜயத்ஸேனா நிஸ்த்ரைகுண்யாபராபரா

**Video Link : https://youtu.be/DtSBLpQStT4**

## 9. கந்தகுரு கவசகத்தில் பூரட்டாதி சக்தி

ஸ்கந்தகுரு கவசபலன் பற்றறுத்துப் பரம் கொடுக்கும்

ஒருதரம் கவசமோதின் உள்ளழுக்குப் போகும்

இருதரம் ஏத்துவீரேல் எண்ணியதெலாம் கிட்டும்

மூன்றுதர மோதின் முன்னிற்பன் ஸ்கந்தகுரு

நான்குமுறை யோதி தினம் நல்லவரம் பெறுவீரே

ஐந்துமுறை தினமோதிப் பஞ்சாக்ஷரம் பெற்று

ஆறு முறையோதி ஆறுதலைப் பெற்றிடுவீர்

ஏழுமுறை தினமோதின் எல்லாம் கவசமாகும்

எட்டுமுறை ஏத்திடின் அட்டமா ஸித்தி கிட்டும்

ஒன்பது தரமோதிம் மரண பயமொழியும்

பத்துதர மோதி நித்தம் பற்றறுத்து வாழ்வீரே

கன்னிமார் ஓடையிலே நீராடி நீறுபூசி

ஸ்கந்தகுரு கவசமோதி ஸ்கந்தகிரி ஏறிவிட்டால்

முந்தை வினையெல்லாம் ஸ்கந்தன் அகற்றிவிடுவான்

நிந்தைகள் நீங்கிவிடும் நிஷ்டையுமே கைகூடும்

கன்னிமார் ஓடைநீரைக் கைகளிலே நீ எடுத்து

ஸ்கந்தனென்ற மந்திரத்தைக் கண்மூடி யுருவேற்றி

உச்சியிலும் தெளித்து உட்கொண்டு விட்டால்

சித்தமலம் அகன்று சித்த சுத்தியும் கொடுக்கும்

கன்னிமார் தேவிகளைக் கன்னிமார் ஓடையிலே

கண்டு வழிபட்டு ஸ்கந்தகிரி யேறிடுவீர்

ஸ்கந்தகிரியேறி ஞான ஸ்கந்தகுரு கவசமிதைப்

பாராயணம் செய்துலகில் பாக்யமெலாம் பெற்றிடுவீர்!!

**Video Link : https://youtu.be/fO7MD2St1iU**

## 10. கந்தர் அநுபூதி பூரட்டாதி சக்தி

கரவாகிய கல்வி உளார் கடை சென்று

இரவா வகை மெய்ப் பொருள் ஈகுவையோ?

குரவா, குமரா, குலிசாயுத, குஞ்

சரவா, சிவயோக தயாபரனே.(45)

எம் தாயும் எனக்கு அருள் தந்தையும் நீ

சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனையாள்

கந்தா, கதிர் வேலவனே, உமையாள்

மைந்தா, குமரா, மறை நாயகனே,(46)

**Video Link : https://youtu.be/x9sjGNdLHkw**

## 11. ராகங்களில் பூரட்டாதி சக்தி

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| மேஷ கல்யாணி | சித்ராம்பரி | சித்ராம்பரி | சுசரித்ரா |

## 12. மூலமந்திரம்

ஓம் சாயி ராமாய வித்மஹே

ஆத்மராமாயி தீமஹி

தன்னோ பாபா ப்ரசோதயாத்

## 13. விருட்ச சக்தி பெற நட வேண்டிய மரம்

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| தேமா | கொங்கிலிய | சுந்தரவேம்பு | கன்னி மந்தாரை |

## 14. பரிகாரம்

- கோவிலுக்கு இரும்பு சாமான்கள் நன்கொடை செய்யவும்.

- குறைந்தபட்சம் 7 நபர்களுக்கு உதவிடுக.
- உங்கள் வழிபாட்டிற்கு ஏற்றபடி மந்திரங்களை பாராயணம் செய்யவும்.
- கோவிலுக்கு சென்று சுவாமியை தரிசிக்கவும்.
- 2x2 கண்ணாடி வைத்து உங்கள் முகத்தை பார்த்து தியானம் செய்யவும். (ஆடி தியானம்).
- நட்சத்திர கோயில் **அருள்மிகு திருவானேஷ்வர் திருக்கோயில்,** ரங்கநாதபுரம் - திருவையார்.


**Aathma Trust (ஆத்ம லிங்கம்)**

Regd No: 96/19

33.கோசாலை, கிரிவலம்,

திருவண்ணாமலை - 600 501.

**Website :** www.aathmanakshtra.org

www.yaasha.in

**Email :** jhohumm@gmail.com

**Youtube :** aathmanakshatra